சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 06.07.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இ.கா.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**வழக்கு எண். SA 9325/E/2024**

திரு.E.விஜி (எ) மணிகண்டன் -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், பொது அதிகார அமைப்பு
புரசைவாக்கம் வட்டம்,
சென்னை மாவட்டம் - 600 007.

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (06.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு.E.விஜி (எ) மணிகண்டன் அவர்கள் இன்றைய விசாரணையில் ஆஜரானார். |
| பொது அதிகார அமைப்பின் சார்பாக | திருமதி.பார்கவி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், புரசைவாக்கம் வட்டம், சென்னை மற்றும் பொதுத் தகவல் அலுவலர் திரு.B.செல்வக்குமார், நிலஅளவையர், புரசைவாக்கம் ஆகியோர் ஆஜரானார்கள். |
| சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் மனு நாள் | 31.01.204 |
| **கோரிய தகவல்**, 27.11.2023 தேதி கொடுக்கப்பட்ட மனு என பார்வையில் குறிப்பிட்டு, பார்வையில் காணும் புரசைவாக்கம் வட்டாட்சியர் அலுவலகத்தில் கொடுக்கப்பட்ட மனுவிற்கு மனுதாரருக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையின் நகல், மேற்காணும் | |

| | |
|---|---|
| புரசைவாக்கம் வட்டாட்சியர் அலுவலகத்தில் மனுதாரரை அழைத்து விசாரணை செய்த விசாரணை அலுவலர் பெயர் மற்றும் அவரது பதவியின் பெயர் உள்ளிட்ட 7 இனங்களில் தகவல்களை வழங்கக் கோரி, பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், புரசைவாக்கம் வட்டம், சென்னை அவர்களுக்கு மனு செய்துள்ளார். | |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் கடிதம் | --- |
| சட்டப் பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 27.03.2024 |
| மேல்முறையீட்டு அலுவலர் பதில் கடிதம் | --- |
| சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் | 14.07.2024 |

•••••

- பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், புரசைவாக்கம் அவர்கள், இவ்வழக்கில் மனுதாரர் கோரியுள்ள தகவலானது நிலம் தொடபானது என்பதால் ஏற்கனவே வட்ட சார் ஆய்வாளர்/ பொதுத் தகவல் அலுவலர், புரசைவாக்கம் அவர்களால் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என தெரிவிக்கிறார்.
- பொதுத் தகவல் அலுவலர்/ நிலஅளவையர், புரசைவாக்கம் அவர்கள், இவ்வழக்கில் மனுதாரர் கோரியுள்ள தகவல்களை மனுதாரருக்கு வழங்கும் பொருட்டு காலஅவகாசம் வழங்குமாறு ஆணையத்தைக் கோரினார்.
- மனுதாரர், இவ்வழக்கில் கோரிய தகவல்கள் தனக்கு நாளதுவரை வழங்கப்படவில்லை எனவும், எனவே நடவடிக்கை மேற்கொள்ள ஆணையத்தைக் கோரினார்.

2. மனுதாரர் மற்றும் பொதுத் தகவல் அலுவலர்களின் வாதம் மற்றும் ஆவணங்களை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது:-

a) **பொதுத் தகவல் அலுவலர்/ நிலஅளவையர், புரசைவாக்கம்** அவர்கள் இவ்வாணை கிடைக்கப்பெற்றவுடன், இவ்வழக்கில் மனுதாரர் சட்டப் பிரிவு 6(1)-ன்கீழ் கோரியுள்ள 7 இனங்களுக்கான முழுமையான தகவல்களை சட்டப் பிரிவு 7(6)-ன்படி கட்டணம் ஏதுமின்றி, அலுவலக முத்திரையுடன் கூடிய சான்றொப்பத்துடன், ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு வழங்கி, மனுதாரர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்ததற்கான ஒப்புகை அட்டையின் நகல் அல்லது அஞ்சல் துறையின் இணையதள அறிக்கையின் நகல் (Online Tracking Consignment) மற்றும் வழங்கப்பட்ட தகவல் குறித்த அறிக்கையின் நகலினை **இவ்வாணையத்தில் 04.08.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க உத்தரவிடப்படுகிறது.**

b) <u>மேலும் முதல் மேல்முறையீட்டு அலுவலர்/ வட்டாட்சியர், புரசைவாக்கம் அவர்களுக்கு கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது</u>:-

I. மனுதாரரின் 31.01.2024 தேதியிட்ட சட்டப் பிரிவு 6(1) மனுவினை பெற்றுக்கொண்டு<u>, வரையறுக்கப்பட்ட 5 தினங்களுக்குள் சட்டப் பிரிவு 6(3)-ன்கீழ் மனுவினை தொடர்புடைய பொதுத் தகவல் அலுவலர்/ பொது அதிகார அமைப்பிற்கு மாற்றத் தவறிய பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர் யார் என கண்டறிந்து, அவர் மீது சட்டப் பிரிவு 20(1)-ன்கீழ் பணத்தண்டமும், 20(2)-ன்கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் ஏன் பரிந்துரைக்கக் கூடாது என்பதற்கான எழுத்துப்பூர்வமான விளக்கத்தினையும்</u>,

II. மேற்படி 31.01.2024 தேதியிட்ட மனுதாரர் மனுவினை சட்டப் பிரிவு 6(3)-ன்கீழ் பெற்றுக்கொண்டு, <u>மனு பெறப்பட்ட 30 தினங்களுக்குள் தகவல் வழங்கத் தவறிய அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் யார் என கண்டறிந்து அவர் மீதும் சட்டப் பிரிவு 20(1)-ன்கீழ் பணத்தண்டமும், 20(2)-ன்கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் ஏன் பரிந்துரைக்கக் கூடாது என்பதற்கான எழுத்துப்பூர்வமான விளக்கத்தினையும்,</u>

III. மேலும், மனுதாரர் 27.03.2024 தேதியிட்டு தனது முதல் மேல்முறையீட்டு மனுவினை, மேல்முறையீட்டு அலுவலர், வட்டாட்சியர் அலுவலசகம் புரசைவாக்கம், சென்னை அவர்களுக்கு முகவரியிட்டுள்ளார். மேற்படி மனுவினை பெற்றுக்கொண்டு, மனுதாரருக்கு தகவல் வழங்காத அப்போதைய முதல் மேல்முறையீட்டு அலுவலர் யார் என கண்டறிந்து, அவர் மீது சட்டப் பிரிவு 20(2)-ன்கீழ் நடவடிக்கை மேற்கொள்ள ஏன் பரிந்துரைக்கக் கூடாது என்பதற்கான அவரது எழுத்து மூலமான விளக்கத்தினை பெற்று, மேற்குறிப்பிட்டாறு பெறப்பட்ட விளக்கங்களை ஓர் அறிக்கையாக தயார் செய்து அவ்வறிக்கையினை <u>இன்று ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக</u> **இவ்வாணையத்தில் 04.08.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க உத்தரவிடப்படுகிறது**.

c) மேற்படி உத்தரவினை முழுமையான நிறைவேற்றி அதுகுறித்த அறிக்கையினை குறிப்பிட்ட தேதியில் இவ்வாணையத்தில் சமர்ப்பிக்க தவறும் பட்சத்தில், விளக்கம் அளிக்க ஏதும் இல்லை என ஆணையத்தால் கருதப்பட்டு சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எச்சரிக்கப்படுகிறது.

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 9325/E/2024</u>**

**<u>பெறுநர்</u>**

முதல் மேல்முறையீட்டு அலுவலர்/ வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
புரசைவாக்கம் வட்டம், சென்னை மாவட்டம் - 600 007.

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத் துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
புரசைவாக்கம் வட்டம், சென்னை மாவட்டம் - 600 007.

பொதுத் தகவல் அலுவலர்/
நில அளவையர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
புரசைவாக்கம் வட்டம், சென்னை மாவட்டம் - 600 007

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

**திரு.E.விஜி (எ) மணிகண்டன், த/பெ.P.ஏழுமலை,**
**46B, அன்னை சத்யா நகர், B- பகுதி,**
**இராஜாஜி சாலை, சென்னை - 600 009.**

Copy to: File MP/PA-